செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்பைக் குறைக்குமா?

விஞ்ஞானம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்தே தீரும்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.20–

செயற்கை நுண்ணறிவு வேலை வாய்ப்பைக் குறைக்குமா? என்றும் விஞ்ஞானம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்தே தீரும்! என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீர மணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களது அறிக்கை வருமாறு:

உலகப் புகழ்பெற்ற இணையதள வணிக நிறுவனமான அமேசான் தளத்தின் நிறுவனரான ஜெஃப் பெசோஸ் கடந்த வாரம் 'ஃபாக்ஸ் நியூஸ்' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி யில், "செயற்கை நுண்ணறி வால் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே வேலை செய்யும் சூழலும், ஒரே ஒரு நபர் மட்டும் வருமானம் ஈட் டும் குடும்ப அமைப்புகளும் உரு வாகப்போகின்றன" என்றும் கூறியி ருப்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும். இதனால், வேலை இழப்பு ஏற்படுமோ என்று எதிர்மறையாகச் சிந்திக்கா மல், நேர்மறையான பார்வையில் அவர் தெரிவித்துள்ள கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதுகிறோம்.

"சிலர், 'வாரத்திற்கு மூன்று நாட் கள் வேலை செய்தாலே என் குடும் பத்தைக் காப்பாற்றிவிட முடியும்' என்று முடி வெடுப்பார்கள். குடும்பத் தில் இருவருமே வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருக்காது. விரும்பினால் வேலை செய்யலாம், இல்லையென்றால் ஒருவர் வேலை யிலிருந்து விலகிக்கொள்ளலாம். பொருளாதாரத்தில் உற்பத்தித்திறன் உயர்வதால், மக்கள் இரண்டு வேலைகளைச் செய்ய விரும்ப வில்லை என்றால், அவர்கள் அவ் வாறு செய்ய வேண்டிய அவசியமும் இருக்காது. எனவே, பணியாளர் களை வேலைக்கு அமர்த்துவது கடி னமாகிவிடும். பொருளாதாரத்தில் உற்பத்தித்திறன் அதிகரிப்பதன் அர்த்தம் இதுதான் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, செயற்கை நுண்ண றிவு காரணமாக, வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்பதற்கு மாறாக, செயற்கை நுண்ணறிவு காலத்தில் செல்வமும், வளங்களும் பெருகும் என்பதால், தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ள தாகவும் அவர் கூறுவது பெரும்பா லோருடைய அச்சத்துக்குப் பதிலாக அமைந்துள்ளது.

நாம் தான் உரத்துக் கூறினோம்!

"அறிவியலின் வளர்ச்சிகளை, மனிதகுலம் பயன்படுத்தி மேம்பட வேண்டும் என்பதே பகுத்தறிவு! ஒரு போதும், அதனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. எத்தகைய பிரச் சினையையும் சந்தித்து, அதை விஞ் சும் ஆற்றல் மனிதகுலத்துக்கு உண்டு என்பதை வரலாறுதோறும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த நூற்றாண்டில் கணினி பெருமளவு புழக்கத்துக்கு வந்தபோது கூட, இது வேலைவாய்ப்பை இல்லா மல் ஆக்கி விடும்; எனவே, கணினி மயமாக்கக் கூடாது என்று சிலர் கரு தினர். அப்போதும் கணினி என்பது அறிவியல் வளர்ச்சி, அதை எதிர்ப் பது அறிவற்ற செயலாகாது; அறிவி யலை நாம் வளைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதன் வளர்ச்சி யைத் தடுக்கவியலாது என்பதைப் பெரியார் கண்ணாடி அணிந்து நாம் தான் உரத்துக் கூறினோம்.

கணினி வேலைவாய்ப்பைப் பெருக்கியதா? வேலை யில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கியதா என்று அதன் பிறகு உலகம் உணர்ந் தது. கணினி அறிவியலின் வளர்ச்சி பெரும் புரட்சியையே மனித குலத் தில் தோற்றுவித்தது. குறிப்பாக தமிழ்நாட்டில், பார்ப்பனரல்லாத, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூ கங்களைச் சார்ந்த பிள்ளைகள் உல கம் முழுக்க வெற்றிக் கொடி நாட்டுவ தற்கு கணினி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை நாம் பற்றிக் கொண் டதே பெரும் காரணமாயிற்று.

இன்றைய செயற்கை நுண்ண றிவு குறித்த அச்சமும் அத்தகை யதே! தொடக்கத்தில் இதனால் சில இடையூறுகள் இருக்கலாம். வேலைக் குறைப்புகளும் கூட நடக்க லாம். அவற்றை நம்மால் தடுக்க முடி யாது. ஆனால், மனித குலத்தின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் இத னையே நாம் வாய்ப்பாகக் கருத வேண்டும்.

"இனி வரும் உலகம்!"

இயந்திரங்கள் பெருகிய காலத் தில், இதே போல வேலைக் குறைவு என்ற பிரச்சினை எழுமோ என்று எல்லோரும் அஞ்சி னார்கள். பகுத்த றிவுப் பகலவனும், காலத்தைக் கடந்து சிந்திப்பவருமான நமது அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியார் அவர்கள், 83 ஆண்டுக ளுக்கு முன்பு தமது "இனி வரும் உல கம் நூலில் இதனைக் குறித்துத் தெரி வித்துள்ள கருத்துகள், இன்றும், நாளையும் மனித குலத்துக்கு உரி யது என்பதை இந்தச் சூழலில் நம் மால் பொருத்திப் பார்க்க முடிகிறது.

இதோ நம் அறிவு ஆசான் பேசு கிறார்:

"...நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டு பிடிக்கப்பட்டி ருக் கும் போது, இனி வருங்கால இயந் திர உலகம் எப்படி இருக்கும் என் பதை விளக்கவும் வேண்டுமா! இம்மாதிரியாகவே வாழ்வுக்கு வேண் டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும் போது நாட்டு மக்களில் ஒவ்வொருவ



ரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்க ளுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகிவிடலாம்.

வேலை இல்லாமற் போகாது!

ஆகவே, ஓர் ஆண்டில் மீதியுள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்க செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டிய தில்லை. வாழ்க்கைச் சாதனங்க ளுக்கு எப்படிக் காலமும், யோசனை யும், கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ அதுபோலவே மக்க ளின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும், போக போக்கியத்துக் கும் யோசனைகளும், ஆராய்ச்சிக ளும், சாதனங்களும், அவற்றைச் சுலபமாகச் செய்ய வசதிகள் கண்டு பிடிப்பதும், அவை நாளுக்கு நாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்க ளில் மீதி நாள்கள் செலவழிக்கப்பட வேண்டி இருக்கும்.

அக்கால நிலை நாம் வரைய றுக்க முடியாத அற்புதங்க ளையும், அதிசயங்களையும் கொண்டிருக்கு மென்று சொல்லுவது, மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால் மக்கள் குறிப்பாக, அறிவாளிகள், சிந் தனையாளர்கள், முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர்க ளுக்கு இவற்றின்மூலம் சதா வேலை இருந்துகொண்டே இருக்கும். அப்ப டிப்பட்ட வேலைகள் இன்று உள்ளது போல் கூலிக்கு வேலை செய்வது போலவோ, இலாபத்துக்கு வேலை செய்வது போலவோ இல்லாமல் உற் சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டு தலுக்கா கவும் ஊக்கத்துடன் வேலை செய்வ தாக இருக்கும்.

அதைப் பார்த்துக் கொண்டிருக் கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்து முடித்து உலகுக் குப் பயன்படச் செய்துகொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

சோம்பேறிகள்!

இப்படியானால் சோம்பேறிகள் வளர்ந்து விட மாட்டார்களா என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்க முடியாது; இருப்பார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், இவர்களால் சமூகத் துக்குத் தேவையான எந்த வேலை யும் குறைந்து போகாது. அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆத லால் அப்படிப்பட்ட இவர்கள் வேலை யில் ஈடுபடுவதைவிட சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமா யிருக்கும்.

பொதுவாக அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மை யிலேயே தங் களுக்கு "வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே, வீணாக நேரம் கழிகிறதே என்று வேலைக் குப் போராடிக் கொண்டு இருப்பார் கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச் சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, கவலை இருக்காது. எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசை தீர வேலை கொடுக்க முடி யாத காலமாக இருக்குமே ஒழிய அந்தக் காலம் வேலைக்கு ஆள் தேட வேண்டியதாகவோ, அவன் வேலை செய்யவில்லை இவன் வேலை செய் யவில்லை என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

"இழிவான" வேலை!

"இழிவான வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா? என்ற கேள்வி பிறக்க லாம். இழிவான வேலை என்பது வருங்காலத்தில் இருக்க முடியாது. சரீரத்தால் செய்யப்பட வேண்டிய எல்லாக் காரியங்களும் அநேகமாக இயந்திரங்களாலேயே செய்யும் படி யாக ஏற்பட்டுவிடும். கக்கூஸ் எடுக்க வேண்டியதும், துலக்க வேண்டிய தும், வீதி கூட்ட வேண்டியதும் கூட இயந்திரத்தினாலேயே செய்து முடித் துவிடும்... மனிதனுக்கு பாரம் எடுக்க வேண்டியதோ, இழுக்க வேண்டி யதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது. அக்காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொதுஜன நன்மை சவுகரியம் ஆகியவைக ளைச் செய்ய வேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டி யினால் "இழிவான வேலைக்கு எப் போதும் கிராக்கி இருந்து கொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்க ளும், நாவலர்களும், சிற்பிகளும் போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்கு பவர்களாகவே இருப்பார்கள். திற மையானவர்களுக்குத் தான் வேலை யும், மதிப்பும் கிடைக்கும்; மற்றவர் கள் அலட்சியப்படுத்தப்படுவார்கள்.

தந்தை பெரியாரின் முன்னோக்கு!

ஆம், உண்மை தான் தோழர் களே, நம்புங்கள்! 1943 ஆம் ஆண்டு தந்தை பெரியார் பேசிய உரைதான் இது! இன்றைய சூழலுக்கும் அச்சு அசலாய் எப்படிப் பொருந்திப் போகி றது பாருங்கள். அன்று தந்தை பெரி யார் சொன்னதைத்தான், இன்று புகழ் பெற்ற அறிவியலாளர்களும், செயற்கை நுண்ணறிவு விற்பன்னர் களும் கூறுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிக் காரணமாக மனிதர்க ளுக்கு வேலையில்லாவிட்டால் என்ன ஆவார்கள் என்பது குறித்து ஓராண்டுக்கு முன்பு, "மக்களுக்கு அதிகச் செழிப்பும், அதிக நேரமும், வளங்களும், ஆற்றலும், திறனும் இருக்கும் இந்த உலகில், குடும்பமும், சமூகமும்தான் நம்மை மிகவும் மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றன என்பது மிகத் தெளிவாகத் தெரிகி றது. நாம் மீண்டும் அதனிடம் திரும் புவோம் என்று நம்புகிறேன்" என்று புகழ்பெற்ற 'ஓபன் ஏஅய்' செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தின் தலை மைச் செயல் அதிகாரியான சாம் ஆல்ட்மென் தெரிவித்திருந்தார். தற்போதைய ஜெப் பெசோசின் (அமேசான்) கருத்தும் இதையே உறுதி செய்கிறது.

'தவிர்க்க முடியாததை ஏற்பதே பகுத்தறிவு' என்று பல நேரங்களில் தந்தை பெரியாரின் சிந்தனையை நாம் சுட்டிக்காட்டுவது உண்டு. அறி வியலின் வளர்ச்சியும் அப்படித்தான்! அதனை ஏற்றுக் கொண்டு, அத னைப் படிக்கல்லாக்கி வளர்வதே மனித குலத்தின் சிறப்பு. இந்த உண் மையைத் தனது பகுத்தறிவால் உணர்ந்தே தந்தை பெரியார் 'இனி வரும் உலகம்' நூலில் மிக விளக்க மாக இப் பகுதியைக் குறித்துப் பேசி யுள்ளார். பெரியாரின் மண்டைச் சுரப்பு இன்னும் பல நூற்றாண்டு களுக்கு மனித குலத்துக்கு வழிகாட்டும்!

எண்ணி எண்ணி வியக்கிறோம். அவரின் பட்டறிவும், பகுத்தறிவும், ஒப்புயர்வற்ற சுயசிந்தனையும் எத்த கையவை என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று பகர? அவரின் மண்டைச் சுரப்பு இன்னும் பல நூற் றாண்டுகளுக்கு மனித குலத்துக்கு வழிகாட்டும் என்பது நொடிதோறும் நிறுவப்பட்டுக் கொண்டே இருக்கி றது.

அதை உலகெங்கும் கொண்டு செல்வதற்கான பாதை யைத்தான் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கி றோம். "பெரியார் உலக மயம்; உல கம் பெரியார் மயம் என்பது பெரியா ருக்காக அல்ல; நமக்காக அல்ல! மனிதகுலத்தின் மேன்மைக்காக!

இவ்வாறு திராவிடர் கழகத் தலை வர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; 30 ரூபாய்க்கு தற்ற சன்னரக அரிசியை வாங்க பொதுமக்கள் மறுப்பதாகவும், வாங்கிட்டுப் போனவங்க, பணத்தை திருப்பித்தரச் சொல்லி கேக்கறதாகவும் செய்திகள் வந்துட்டே இருக்கே!

போண்டி : **ஆமாய்யா; ஜனங்களை ஏமாளிங்கன்னு நினைச்சு த.வெ.க. அரசு இப்படியொரு குறுக்கு வழியை தேர்ந்தெடுத்திருக்கு. இலவசமா தரவேண்டிய அரிசியிலே பணம் பார்க்கும் கேவலமான போக்கை எண்ணி மக்கள் தலையில் அடிச்சிக்கிறாங்க.**

இந்திய தூதரகம் மாலத்தீவில் சிக்கியுள்ள

மீனவர்களையும் - படகுகளையும் எந்தவித அபராதமுமின்றி மீட்டுத் தரவேண்டும்!

சர்வதேச மீனவர் வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் முனைவர் ப.ஜஸ்டின் ஆன்டணி கோரிக்கை!

கன்னியாகுமரி, அக்.20–

இந்திய தூதரகம் மாலத்தீவில் சிக்கியுள்ள 26 மீனவர்களையும் 3 விசைப் படகுகளையும் எந்தவித அபராதமுமின்றி மீட்டுத்தர வேண் டும் என சர்வதேச மீனவர் வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் முனைவர் ப.ஜஸ்டின் ஆன்டணி கோரிக்கை வைத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கை வருமாறு:-

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது மாலத்தீவு படையால் சுற்றி வளைக்கப்பட்ட தூத்துக்குடி, ராமநாத புரம், விழுப்புரம் மாவட்டங்களை சார்ந்த 26 மீனவர்களையும் 3 விசைப்படகுகளையும் மீட்கவும் இம் மீனவர்களை சந்தித்து தேவையான உதவிகளை செய்யவும் வேண்டி மாலத்தீவிலுள்ள இந்திய தூதரகம் சர்வதேச மீனவர் வளர்ச்சி அறக்கட டளை தலைவர் ஜஸ்டின் ஆன்டணி வேண்டுகோள் வைத்தார்.

இவ்விவகாரத்தை பிரதமர், வெளிவிவகாரத்துறை அமைச்சர், தமிழக முதல்வர் உள்ளிட்டோருக் கும் தெரிவித்திருந்தார்.

"மீனவர்களையும் படகுகளை யும் மீட்க துரித நடவடிக்கை எடுக்கப் படும் என மாலத்தீவுக்கான இந்திய உயர் ஆணையர் ஜி.பாலசுப்ரமணி யன், ஜஸ்டின் ஆன்டணிக்குப் பதி லளித்துள்ளார். மேலும், இந்திய உயர் ஆணைய அதிகாரிகள் அக். 17ம் தேதி இம்மீனவர்களை சந்தித் ததாகவும், இவர்களது உணவு, மருத்துவ வசதிக்கான ஏற்பாடு களை செய்துள்ளதாகவும் உயர் ஆணைய அதிகாரிகள் சர்வதேச மீனவர் வளர்ச்சி அறக்கட்டளைக்கு தெரிவித்துள்ளனர். இதற்கு மீனவர் கள் மற்றும் குடும்பத்தினர் சார்பில் சர்வதேச மீனவர் வளர்ச்சி அறக்கட டளை நன்றி தெரிவித்துள்ளது.

அக்டோபர் 1, 2, 3 ஆகிய தேதி களில் தூத்துக்குடி மாவட்டம் தரு வைகுளம் மீன்பிடி இறங்கு தளத்தி லிருந்து மீன்பிடிப்பிற்காகச் சென்றி ருந்த இம்மீனவர்கள், மாலத்தீவிலி ருந்து சுமார் 180 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண் டிருந்த போது மாலத்தீவு நாட்டு எல்லைக்குள் நுழைந்ததாக 26 தமிழக மீனவர்களையும் 3 விசைப் படகுகளையும் மாலத்தீவு படை யினர் சிறைபிடித்து அவர்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இம்மீனவர்கள் வேண்டு மென்றே எல்லை தாண்டிச்சென்று தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு எதிரான ஒரு சூழ்நிலையை உரு வாக்குபவர்கள் அல்ல. கடல் தொழில் மட்டுமே இவர்களது ஒரே வாழ்வாதாரமாகும். மீன்பிடிப்படக கள் என்பவை இவர்களது உயி ருக்கு நிகரான சொத்தாகும். மாலத் தீவு நாட்டிலுள்ள இந்திய தூதர கத்தின் கனிவான தலையீடு மட டுமே, இம்மீனவர்களையும் படுக களையும் எந்தவித அபராதமுமின்றி பாதுகாப்பாக மீட்டுக் கொண்டுவர முடியும் என ஜஸ்டின் ஆன்டணி தனது கோரிக்கையில் தெரிவித்தி ருந்தார்.

மாலத்தீவிலிருந்து ஜஸ்டின் ஆன்டணியிடம் பேசிய இம்மீனவர் களில் ஒருவர், மாலத்தீவிலுள்ள இந்திய தூதரகம் அதிகாரிகள் தங் களை வந்து சந்தித்து தேவைகளை கேட்டறிந்ததும், மருத்துவ வசதிக் கான ஏற்பாடுகளை செய்துள்ளதும் தங்களுக்கு மிக்க மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள் ளார்.

புதுச்சேரி மாநிலத்தில் கழக மறுசீரமைப்பு!

தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக பவளவிழா கண்டு நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம்முடைய திராவிட முன்னேற்றக்கழகம் புத்தெழுச்சியைப் பெற அடுத்தகட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்ட மறுசீரமைப்புக் குழுவானது பல்வேறு பரிந்துரைகளை கழகத்தலைவர் அவர்களிடம் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் இப்பணி முழுவேகத்தில் நடைபெறும் அதே சமயத்தில், புதுச்சேரி மாநிலத்திலும் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு கழகத்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, புதுச்சேரி மாநிலத்தில் மேற்கொள்ள வேண்டிய கழக சீரமைப்புகள் குறித்தும் திரு. தங்கம் தென்னரசு தலைமையிலான மறுசீரமைப்புக்குழு, நவம்பர் 10ஆம் தேதிக்குள் தனது பரிந்துரைகளை வழங்கிடும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 19.10.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

நிவேதா எம்.முருகன் தலைமை! பூம்புகார் தொகுதிக்குட்பட்ட

ஒன்றிய, நகர, பேரூர் கழக மறு சீரமைப்பு குழுக் கூட்டம்!

தலைமைக் கழக பிரதிநிதிகள் கோவி.செழியன் எம்.எல்.ஏ., துரை கி.சரவணன் சிறப்புரை!

மயிலாடுதுறை, அக்.20–

மயிலாடுதுறை மாவட்டம் பூம் புகார் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பி னர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர. பேரூர்க் கழகச் செய லாளர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்களுடன் கழக மறு சீர மைப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் மேமாத்தூர் ஏ.ஆர்.மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பி னர் குத்தாலம் பி.கல்யாணம் முன் னிலை வைத்தார். கூட்டத்தில் மயி லாடுதுறை மாவட்டத்திற்கான தலை மைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம். எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் ஆகி யோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப் பினர் எம்.எம்.சித்திக், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம.ஸ்ரீதர். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞான வேலன், ஒன்றியக் கழக செயலாளர் கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்திய நாதன், ஏ.ஆர்.ராஜா, பி.எம. அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏவின்சென்ட், ஹர்ஷத், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பா ளர் வி.எஸ்.என்.செந்தில், வி.எஸ். பிரபாகர், வெடி எஸ்.பாலமுருகன், காளி.தேசப்பன், கழக நிர்வாகிகள் எஸ்.ஜி.நெடுஞ்செழியன், விக்னேஷ், ஜி.தெட்சணத்தி, இளங்கோவன், எஸ்.தென்னரசன், எம்.மணிமாறன், ராஜா, சுப்பையன், ஏ.சடகோபன், ஜி.கருணாநிதி, ஜி. மதுபழகன், எஸ் ஆர் பாண்டியன், எஸ்.பாண்டியன், கே.சத்திய நான், ஜி.ஆர்.பிரபாகர், எஸ்.லோகு, ஜெ.சக்தி வெங்கடேஸ்வ ரன், ஆர். பரிதி, க.சங்கர், ஏ.எல்.எழி லரசன், எம்.பி. கணேசன், கே.எஸ். எஸ்.கருணாநிதி உள்ளிட்ட கழக நிர் வாகிகள் கலந்து கொண்டனர்/



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர.பேரூர் கழக செயலாளர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்களுடன் கழக மறு சீரமைப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் செம்பனார்கோயிலை அடுத்த மேமாத்தூர் ஏ.ஆர்.மஹாலில் நடைபெற்றது கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழகபேசினார் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கி பேசினார். உடன் தலைமைக் கழக பிரதிநிதி முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பிரதிநிதி மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன்.கழக உயர்நிலை செயல் திட்ட குழுகுத்தாலம் பி கல்யாணம், விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன் மற்றும் பலர் உள்ளனர்.



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தலைமை கழக நிர்வாகிகள் இ.கருணாநிதி ப.தாயகம் கவி கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி,மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், முன்னாள் எம்எல்ஏ அமலு, மாநகராட்சி மேயர் சுஜாதா,மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய செயலாளர்கள், பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாநில துணை செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.